விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka ★ ★

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ் 151

யாழ்ப்பாணம் ஆடி 1 ஆனி 26 புதன்கிழமை 17-7-74

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY 17 JUL 1974

நவீன கணிதம்

(தபால் மூலம்)

... செலவில், சிறந்த முறை ..., 7-ம், 8-ம் வகுப்புகளுக்கும், ... கல்வித்தராதர வகுப்பிற்கும் ..., ஆசிரியர்களுக்கும், ஆசிரிய ...ச் கல்லூரி மாணவர்களுக்கும் தபால் மூலம் போதிக்கப்படுகிறது.

மாலையில் நடைபெறும் வகுப்புகள் 5 முதல் 8 மணிவரை நடைபெறும்

விபரங்களுக்கு:-

மொடேர்ண் எட்யூகேஷன் சென்ரர்

நெல்லியடி—கரவெட்டி

# பரமேஸ்வரா கல்லூரிக்கு உபவேந்தர் விஜயம்!

## கதிர்காமத்தில் காலரா!

கொழும்பு, செவ். கதிர்காமத்தில் காலரா நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் கதிர்காமப்பகுதி நோய்ப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கதிர்காமத்துக்கும் அதுபோன்ற பகுதிகளில் நடைபெறும் திருவிழாக்களிலும் கலந்து கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளும்படி பொதுமக்களை சுகாதார அமைச்சு கோரியுள்ளது.

## இராமநாதன் கல்லூரியையும் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், புதன் இலங்கைப் பல்கலைக் கழக உபவேந்தர் திரு. எல். எச். சுமணதாசா யாழ்ப்பாண பல்கலைக் கழக வளாகம் அமைக்கப்படவிருக்கும் பரமேஸ்வராக் கல்லூரிக்கு நேற்று விஜயம் செய்து கட்டிட வசதிகளைப் பார்வையிட்டார். அவருடன் பல்கலைக் கழக பதிவாளர் திரு கமால் கருணை நாயக்கா நிதிப்பொறுப்பாளர் திரு. நவரத்தின ஆகியோரும் சென்றிருந்தனர்.

நேற்றுக்காலை விமான மூலம் பலாலி வந்தடைந்த உபவேந்தரையும் அவர் குழுவினரையும் வடமாநில கல்வி அதிபதி திரு. த. மாணிக்கவாசகர், பிரதம கல்வி அதிகாரி திரு. பி. எஸ். குமாரசுவாமி, மற்றும் கல்வி

(3ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணக் கல்லூரி எடுக்கப்படுமா?

# தமக்கு எதுவும் தெரியாது என்கிறார் உபவேந்தர்

யாழ்ப்பாணம், புதன் வட்டுக்கோட்டையில் நிறுவப்படவிருக்கும் பல்கலைக்கழக வளாகத்துக்காக யாழ்ப்பாணக் கல்லூரி அரசினால் பொறுப்பேற்கப்படும் என்று நேற்றைய 'டெய்லி நியூஸ்' பத்திரிகையிலும் 'தினகரன்' பத்திரிகையிலும் வெளியாகியுள்ள செய்திபற்றி இப்பொழுது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள பல்கலைக்கழக உபவேந்தர் திரு. எல். எச். சுமணதாஸ தமக்கு எதுவும் தெரியாதென்று தெரிவித்துள்ளார்.

உபவேந்தர் திரு. சுமணதாசவையும் குழுவினரையும் நேற்று மாலை சந்தித்துப் பேசிய தமிழ் பிரமுகர்கள் அவரிடம் மேற்படி விஷயமாக வினவினர்கள். யாழ்ப்பாணக் கல்லூரியைப் பொறுப்பேற்கும் விஷயம் குறித்து தமக்குத் தெரியாதென்றும் ஆனால் பரமேஸ்வராக்கல்லூரியில் பல்கலைக் கழக வளாகம் நிறுவப்படுவதென்பது உறுதியான முடிவு என்று அவர்கள் தெரிவித்தனர்.

சைவபரிபாலனசபை, வித்தியாவிருத்திச் சங்கம், யாழ். நகரசன் மார்க்க சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் உபவேந்தரையும் குழுவையும் சந்தித்தது. திரு. சி. முருகேசம்பிள்ளை, திரு எஸ் செல்வராசா, திரு வே

(3ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீகாந்தாதேவி மர்ம மரணம்:

## 1ம், 2ம், சந்தேகநபர்களுக்கு தொடர்ந்து றிமாண்ட்

### மூவர் பிணையில் அனுமதி

யாழ்ப்பாணம், புதன் வட்டுக்கோட்டை ஸ்ரீகாந்தாதேவியின் மர்ம மரணம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 1-ம் சந்தேகநபர் சுகவீனம் காரணமாக கோர்ட்டிற்கு வரவில்லை.

மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வேகரத்தினம் முன்னிலையில் மற்றும் சந்தேகநபர்கள் நேற்று ஆஜர்செய்யப்பட்டனர்.

1-ம், 2 ம் சந்தேக நபர்களை இம்மாதம் 28-ம் தேதிவரை றிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

மற்றும் 3 சந்தேகநபர்களையும், தலா 1000 ரூபா பிணையில் இரு நிபந்தனைகளுடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பிணையில் செல்லும் சந்தேக நபர்கள் சாட்சிகளுக்கும் தொந்தரவு கொடுத்தல் பயமுறுத்தல் கூடாதென்றும் ஒவ்வொரு மாதமும் முதல் திங்கட்கிழமையும் பொலிஸ் நிலையத்திற்கு செல்லவேண்டுமென்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இந்த நிபந்தனைகள் மீறப்பட்டால், பிணை ரத்துச்செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானார். இன்ஸ்பெக்டர் குமார் வழக்கை நடத்தினார்.

(க-அ)

## அரசுடன் எத்தனை எம்.பி.க்கள் இணைவர்?

கொழும்பு, செவ்வாய் தேசிய அரசுப்பேரவை வியாழக்கிழமை கூடவிருக்கும் அதே வேளையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் இன்னும் எத்தனைபேர் அரசாங்கத் தரப்பில் சேரப்போகிறார்கள் என்று அரசியல் வட்டாரங்களில் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு அரசாங்கத்தரப்பில் சேரக்கூடிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பற்றிய பல பெயர்கள் கொழும்பில் அடிபடுகின்றன.

வியாழக்கிழமை அன்றே எதிர்க்கட்சி உறுப்பினர் எவராகுதல் அரசாங்கத்தரப்பில் அமரக்கூடும் என்றும் சிலர் கருதுகிறார்கள்.

அக்குரஸ்ஸ உறுப்பினர் டாக்டர் விக்கிரமசிங்... றியும் ஹோஷ்யங்கள் அடிபடு...

(4ம் பக்கம் பார்க்க)

## 'பகிஷ்கரிப்பு இயக்கத்தை தமிழ் மக்கள் பகிஷ்கரித்தனர்'

### பத்திரிகையாளர் மத்தியில் மேயர்

யாழ்ப்பாணம், புதன் யாழ். மாநகரசபையின் வெள்ளிவிழாவைப் பகிஷ்கரிக்குமாறு சிலர் கோரிக்கைவிட்டனர். ஆனால் தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பு இயக்கத்தையே பகிஷ்கரித்துவிட்டனர்.

யாழ்ப்பாணமேயர் திரு. அல்பிரட் துரையப்பா நேற்றும் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில்மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேயர் தொடர்ந்து கூறியதாவது:

பகிஷ்கரிப்பு என்ற வார்த்தை சிலர் அடிக்கடி பாவித்து இன்று அந்த வார்த்தைக்கே அர்த்தமில்லாமல் போய்விட்டது. மக்கள் அந்த வார்த்தையைக் கேட்டுக்கேட்டுச் சலித்துவிட்டார்கள். அதனால்தான் வெள்ளிவிழா பகிஷ்கரிப்பு புஷ்வாணமாகிவிட்டது.

வெள்ளிவிழாவில் தினமும் மக்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர். அதுவும் விழாவில் பங்கெடுத்தவர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள், பயமுறுத்தல் கடிதங்கள் கிடைத்தபின்னரும் கூட மக்கள், மாணவர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், விவசாயிகள் ஆர்வத்துடனும் தமிழ் உணர்ச்சியுடனும் கலந்து கொண்டனர்.

... க்குள்ளிருந்து மட்டுமல்ல விவசாயிகள், பூநகரி, ...

நொச்சி போன்ற பகுதிகளிலிருந்தும் கலந்து கொண்டு பரிசு பெற்றுள்ளார்கள்.

விழாவைப் பகிஷ்கரிக்கும்படி துண்டுப்பிரசுரம் வெளியிட்ட மாநகரசபை உறுப்பினர்களில் சிலர் தங்கள் பிள்ளைகளுடன் வந்து கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார்கள். அவர்களுக்கு என் நன்றி.

விழாவில் கலந்து கொண்ட வர்த்தகப் பெருமக்கள், உதவியாளர்கள், விவசாயிகள், அறிஞர்கள், மாணவர்கள், கலைஞர்கள் சகலருக்கும் மாநகரசபை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

71-ம் ஆண்டுவரை பிரதானி நாயகம் அடிகளார் தலைமையில் ஒரு குழு என்னைச் சந்தித்தபோது தமிழ் ஆராய்

[4-ம் பக்கம் பார்க்க]

யாழ். பொது நூலகத்தில்

## தமிழ் ஆராய்ச்சிக்கு தனியான இடம்!

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் தமிழ் ஆராய்ச்சிக்கென ஒருதனியான பிரிவு அடுத்த மாதம் ஆரம்பித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இத் தகவலை, நேற்று நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

திரு. துரையப்பா மேலும் கூறியதாவது:- தமிழ் ஆராய்ச்சி கூடத்தில் தமிழ்பெரியார்களின் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யவைக்கப்படும். முதலாவதாக கலாநிதி ஆனந்தக்குமாரசாமியின் உருவப்படம் திறந்து வைக்கப்படும்.

தமிழ்ப்பண்பாடு, கலாசாரம், நாகரீகத்தை வெளிப்படுத்தும், நூல்கள் கல்வெட்டுகள், ஏட்டுச் சுவடிகள் இந்தக் கூடத்தில் இடம்பெறும். ஒவ்வொரு மாதமும் தமிழ் பெரியார் ஒருவர் தமிழ் மொழிபற்றி உரையாற்றுவார் என்றும், அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெறுமென்றும் மேயர் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### விற்பனைக்கு

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கு முன்பாக இருக்கும் 'உமாவனம்' என்னும் வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். பொ. முத்துக்குமாரசாமிக் குருக்கள். 38, இராமநாதன் வீதி, கொழும்பு-13. 357

சாவகச்சேரியில் வைத்திய சாலைக்கும் புகையிரத நிலையத்திற்கும் அண்மையில் மின்சார, தண்ணீர் மற்றும் வசதிகளுடன் 5 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. பிராஜ்மல் என்றம் பிறைசஸ். 213/1. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். 302

'வூல்லி இங்கிலிஷ்' புதிய தண்ணீர் இறைக்கும் யந்திரம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். ச. பாலசிங்கம், ஞானசுரபி', 217, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 361

தெல்லிப்பளை கிழக்கில், மகாஜனக்கல்லூரி, யூனியன் கல்லூரிகட்கு அண்மையிலும் போக்குவரத்து வசதியான பாதையிலும், திரு. S. J V. செல்வநாயகம் அவர்களின் வீட்டிற்கு அண்மையிலுமாயுள்ள 12 1/4, பரப்புக்காணி தென்னை, பலா, மாவுடனும் இரு கிணற்றிற் பங்குடனும் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 190 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 190

### தேவை

அனுபவமுள்ள உணவு பரிமாறுபவர், சமையல் உதவியாளர். நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 'யாழ. இன்' முத்திரைச் சந்தை, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 359

### கல்வி

க. பொ. த. (சா) பரீட்சைக்குத் தபால் மூலம் கணக்கியல், எண்கணிதம், ஆங்கிலம், எமது ஆங்கிலப் பாடங்கள் தமிழ் விளக்கம் கொண்டவை. இலகுவாக விளங்கக்கூடியவை. றெக்ஸ் கியூட்டறி, யாழ்ப்பாணம். 285

## அறிவித்தல்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில்

5000 ற்குமேற்பட்ட வெற்றுச் சாக்குகள்.

45 கலன் வெற்றுத் தகரங்கள்.

4கலன் வெற்றுத்தகரங்கள்.

பெட்டிவகைகள்.

பழைய லொறி ரயர்கள்.

கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. வைப்புப் பணம் ரூபா 250/-சங்கத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 23 7-74 செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தகரம், பெட்டி, ரயர்களுக்கு ரூபா 25/- வைப்புப்பணம் செலுத்திக் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர். 188

### நியமனம்

பருத்தித்துறை, செவ். கரவெட்டி துன்னாலை தெற்கைச் சேர்ந்த திரு. எஸ். செல்லையா கட்டைவேலி நெல்லியடி கள் உற்பத்தி விற்பனைச் சங்க தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மீன்பிடிக் கூட்டுத்தாபன இயக்குநராகவும் இருந்து வருகிறார். (அ

## ஏல விற்பனவு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணம் மாநகரசபைப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியா தெரு இறை "பிரமாடிவளவு" நிலபரப்பு 3 சேவயர் அளவுப்படி நிலப்பரப்பு 2 குழி 14 3/4 லும் பொருப்பாக கட்டப்பட்ட வீடும் 1974-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. இன்னத்தம்பி செல்லையாவின் உத்தரவுப்படி என்னால் விற்கப்படும். 5-7-74-ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும். மறு விபரங்களுக்கு என்னால் விநியோகம் செய்யப்படும் விற்பனவுத் துண்டுப் பிரசுரங்களைப் பார்வையிடவும். அல்லது யாழ்ப்பாண வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. சி. செல்லையா அவர்களை அல்லது என்னை தொடர்பு கொள்ளவும்.

### ஆதனடாப்பு

வடமாகாண யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியா தெரு இறை "பிரமாடிவளவு" நிலப்பரப்பு 3 ஆளும் உத்தரவு அளவுக்காரர் கி. இராசகாரியரால் 28-9-1962-ல் தயாரிக்கப்பட்ட 724-ம் நம்பர் அளவுப்படத்தின்படி பரப்பு 2 குழி 14 3/4 என்றும் மூதலாம் துண்டாக இக்காணி காட்டப்பட்டிருக்கின்றது. இதற்கு வரியிறுப்பு இலக்கம் 12/2 கில்வத்தெரு ஒழுங்கை இக்காணிக்கு எல்லை கிழக்கு படத்தில் காட்டப்பட்ட 2-ம் துண்டுக்காணியும் பாலசுந்தரம் பெண் கோகிலத்தின் காணியும் வடக்கு பாலசுந்தரம் பெண் கோகிலத்தின் காணியும் வடக்கு பாலசுந்தரம் பெண் கோகிலத்திற்கும் ஒழுங்கை முகப்பும் ஆறுமுகம் செல்லையா பெண் பொன்னம்மாவின் ஆதனமும் மேற்கு இளையதம்பி சபாரத்தினத்தின் உரிமைக்காரரின் ஆதனம். தெற்கு எ. கே. பொன்னையாவின் உரிமைக்காரருக்கும் கணபதிவரர் ஆறுமுகத்திற்கும் மறுபேருக்குரிய ஆதனம் இடங்கலும் பொன்னம்மாவின் வடக்கெல்லைக்காணியிலுள்ள கிணற்றில் பங்கும் இதற்குரிய வழிவாய்க்காலும் மேலும் வடக்கேயுள்ள ரோட்டுக்குப் போக நாலு முழ ஒழுங்கைக் கூடாகப் போகும் பாவிப்புரித்தும் மேலும் இதனுள் கட்டப்பட்டிருக்கும் வீடும். இக்காணி யாழ்ப்பாணம் பதிவுக் கந்தோரில் டி. 282/101 இலக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மு. நவரத்தினராசா
மாவட்ட கோட்டு
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும் பகிரங்க
ஏல விற்பனையாளரும்.
'கலையகம்'
மண்டைதீவு.

18

## 'பிரச்னைகளுக்கு இப்படித்தீர்வு காணமுடியாது'

நெல்லியடி, செவ். "அரசியல் லாபம் கருதியோ அன்றி சுயநலம் காரணமாகவோ தொழிற் சங்கங்களை உருவாக்குவதன் மூலம் ஆசிரியரின் பொது அடிப்படைப் பிரச்னைகளுக்கு தீர்வுகாண முடியாது' என்று ஸ்ரீலங்கா ஐக்கிய குருசங்க உடுப்பிட்டிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய திரு வி. மகாலிங்கம் தெரிவித்தார். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. (அ

# முன்னாள் அதிபர் மக்காரியோஸ் உயிருடன் இருக்கிறாராம்

## விரைவில் தேர்தல் என்கிறார் புதிய சைப்பிரஸ் அதிபர்

நிக்கோஷியா, ஜூலை 16 சைப்பிரஸில் நேற்று இடம்பெற்ற இராணுவப் புரட்சியின்போது கொல்லப்பட்டதாகக் கூறப்படும் அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் உயிருடன் இருக்கிறார் என்று லண்டனிலுள்ள சைப்பிரஸ் தூதுவர் தெரிவித்தார். இதேசமயம், சைப்பிரஸின் அரசுக்கு விசுவாசமுள்ள மக்களை காப்பாற்றும் பொருட்டும் அங்கு இரத்தம் சிந்துவதைத் தடைசெய்யும் பொருட்டும் ஐ. நா. ஸ்தாபனம் இப்பிரச்னையில் தலையிட வேண்டும் என்று மக்காரியோஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவப் புரட்சியினர் அதிபராகப் பதவியேற்ற நிக்கலோஸ் சாம்ஸன், தமது அரசு சட்டமும், ஒழுங்கும் அமைதியும் நாட்டில் நிலைபெற ஆயன்றவரைக்கும் பாடுபடும் என்றும் சைப்பிரஸ் சுதந்திரமான நாடாகவே இருக்கவிரும்புகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

சைப்பிரஸில் விரைவில் சுதந்திரமான பொதுத் தேர்தல் ஒன்று இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

# விமானத்தைக் கடத்தியவன் தற்கொலை முயற்சி

டோக்கியோ, ஜூலை 16 ஒட்டாவாவிலிருந்து டோக்கியோவுக்கு 80 பிரயாணிகளுடன் சென்ற ஜப்பானிய விமானத்தை கடத்திய கடத்தல் காரர்கள் இன்று காலை கைதுசெய்யப்பட்டனர்.

டோக்கியோவிலிருந்து 270 கிலோ மீட்டர் தொலைவில் நாகோயா என்னும் விமான நிலையத்தில் வைத்து இவர்கள் இவ் விமானத்தைக் கடத்தினார்கள்.

கடத்தல்காரர்களில் ஒருவன் தனது கழுத்தைத் தானே வெட்டி தற்கொலை செய்ய முயற்சிசெய்தான் என்றும் இப்போது அவன் அபாயநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சைக்கிள் பார் வாங்கச் சென்றவர் கைது!

பருத்தித்துறை, செவ். கரவெட்டியிலுள்ள தனிப்பட்ட ஒரு கல்வி நிலையத்தில் களவுபோன சைக்கிள் ஒன்று யாழ். பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது. சைக்கிள் திருடிய நபர் புதிதாக சைக்கிள் 'பார்' ஒன்றினை யாழ். கடை வீதியில் வாங்கச் சென்றசமயம் பொலிஸார் அவரைப் பிடித்தனர். களவுபோன குறிப்பிட்ட சைக்கிள் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட்டிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## புதிய மடத்தில் அன்னதானம்

மாவிட்டபுரம், செவ். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை தொழிலாளர்கள் மாவை ஆலய உற்சவத் தேர் தீர்த்த விழாக்களையொட்டி நடத்தும் அன்னதானம் இம்முறை புதிதாக அமைக்கப்பட்டு வரும் அன்னதான மடத்தில் நிகழவிருக்கிறது.

சென்ற வருடங்களில் காங்கேசன்துறை சீமெந்து தொழிலாளர்கள் அன்னதானம் செய்ய மடங்கள் வசதியாக இல்லாததால் தமக்கென ஒரு மடத்தை அமைப்பதென தீர்மானித்து மாவை ஆலய வடக்கு வீதியில் பிரமாண்டமான மடம் ஒன்று அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியாகும் நிலையை அடைந்துள்ளது.

இம்மடத்திலேயே இம்முறை அவர்களது அன்னதானம் நிகழவிருக்கிறது. (ஈ)

......

## தகவலுக்கு ரூ. 100 சன்மானம்

யாழ்ப்பாணம், புதன் வடபகுதியில் தந்திக்கம்பி திருட்டுகள் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு 100ரூபா சன்மானம்வழங்க, பொலிஸ் அதிபர் திரு. ஆரியசிங்கா முன்வந்துள்ளார்.

தந்திக்கம்பி திருட்டு அரசுக்கு எதிரான நடவடிக்கையெனக் கருதப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வடபகுதியில் ஊர்காவற்றுறை, சுன்னாகம், பளைப் பகுதிகளில் புகையிரதப் பாதைகளுக்கருகிலுள்ள கம்பிகள் திருடப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஈ)




வெள்ளிவிழா நீ…

## முதல… பா…

யாழ்ப்பாணம்…
யாழ்ப்பாணம்ாந…
வெள்ளி விழாவை…
குருநகர் இறங்கு…
நடந்த நீச்சல் போ…
11 பேர் பங்குபற்றி…
படகுதளமுடன் போ…
10 படகுகள் பங்குப…
படகுதளமுடன்…
டிவை அரசாங்க அதி…
விமல் அமரசேகர…
பித்துவைத்தார்.

நீச்சல் போட்டி…
யூலிலுள்ள வெளிச்ச…
ருந்து ஆரம்பமாகி…
இறங்குதுறையில் மு…
நதது.

சுமார் 3 மைல்தூர…
பெற்ற இந்த நீச்சல்…
டியில் வெற்றி பெற்…
விபரம்:-

(1) சிலுவைதாஸ்…
யூர் (2) ஏ. நெல்சன்…
யூர் (3) (ஆ) பூலி…
நகர்.

நீச்சல் போட்டி…
மணிக்கு ஆரம்பமா…
மணிக்கு முடி வடை…
முதலாவது நபர் 55…

## யாழ்ப்பாணக்—

[1ம் பக்கத் தொட…
சதாசிவம், சட்…
சுந்தரலிங்கம் ஆகி…
குழுவில் இருந்தனர்…

வடபகுதியில் …
படவிருக்கும் வளா…
இராமநாதனின் பெ…
டப்படவேண்டுமெ…
அது ஒரு தேசிய வ…
அமைய வேண்டு…
குழுவினர் கேட்டுக்…
ளர்.

வளாகதமத அமை…
காணி பற்றுக்குறை…
தாகக் கருதப்படு…
கோப்பாய் ஆசிரிய…
லூரி இருக்குமிடத்தி…
கர் காணி இரா…
சொந்தமாக இருப்…
பரமேஸ்வராக் கல்…
லேயே 12 ஏக்கர் க…
படாத காணி இப்…
லேலும் தனலக்சும…
காணி பெருமளவில்…
தாகவும் சுட்டிக்காட்…
வினர் இவைகளை…
படுத்திக்கொள்ள…
மென்று கேட்டுக்கொ…
டன் இதில் வேறு…
எதுவும்ஏற்படுவதை…
எதிர்ப்பதாகவும்…
தினர்.

இந்த சூழ்நிலையில்…
சம் இந்துக்கள் வதி…
பிரதேசததில்…
வளாகத்தின் தலை…
இந்துவாகவே இருக்…
டும் என்றும் அவர்க…
யுறுததினர்.

பிரமுகர்கள் குழு…
துக்களைப்பற்றி கவன…
தருவதாகவும் இ…
கல்வி அமைச்சருக்கு…
ரைப்பதாகவும் க…
குழுவினர் தெரிவ…

## இன்று மு… தெரியும…

கொழும்…
யாழ்ப்பாணக் கல்…
பல்கலைக்கழக வ…
கக எடுப்பதா…
என்பதுபற்றி நாளை…
கிழமை முடிவு எடுக்…
என்று கல்வி அமை…
டாரங்கள் தெரி…
இன்று இதுபற்றி…
பட்டதாகத் தெரி…

## விசேட வழி…

மீசாலை…
இம்மாதம் 17-ம்…
யாழ்ப்பாணம்மற…
முன்னாள் மே…
யார் ஜே. எம…
பிள்ளை ஆண்டகை…
வனடியடைந்த…
அனிசேகர் பூர்…
தால் அன்று ப…
நாலவட்ட தேவ…
தேசஜம் திருப்பலியு…
வழிபாடுகளும் த…
ஏற்பாடாகியுள்ளது…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள்ளிவிழா நீச்சல் போட்டி

# முதலிரு பரிசுகள் பாஷையூருக்கு

யாழ்ப்பாணம், புதன்
ாழ்ப்பாணம்மாநகரசபை
ள்ளி விழாவை யொட்டி
நகர் இறங்குதுறையில்
ந்த நீச்சல் போட்டியில்
பேர் பங்குபற்றினர்கள்.
குதாண்டல் போட்டியில்
டகுகள் பங்குபற்றினர்.
குதாண்டல் போட்
அரசாங்க அதிபர் திரு.
ல் அமரசேகரா ஆரம்
ுவைத்தார்.
ச்சல் போட்டி பாஷை
யூரின வெளிச்ச வீட்டிலி
ு ஆரம்பமாகி குருநகர்
ங்குதுறையில் முடிவடை
து.
மார் 3 மைல்தூரம் நடை
ற்ற இந்த நீச்சல் போட்
ல் வெற்றி பெற்றவர்கள்
ரம்:-
1) சிலுவைதாஸ் பாஷை
(2) ஏ. நெல்சன் பாஷை
(3) (ஆ) பூலியஸ் குரு
ர்.
ச்சல் போட்டி காலை 8-45
ிக்கு ஆரம்பமாகி 9-40
ிக்கு முடிவடைந்தது;
லாவது நபர் 55 நிமிடத்
திலும். இரண்டாவது நபர் 58 நிமிடத்திலும் மூன்றுவது நபர் 60 நிமிஷத்திலும் நீந்தி முடித்தனர்.

நீச்சல் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டது.

படகுதாண்டல் போட்டியில் முதலாவதாக நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அ. அரியம், ம. பால்ராஜ் வெற்றி பெற்றார்கள். இரண்டாவதாக நாவாந்துறை சென் மேரிஸ் கழகத்தை சேர்ந்த அ. அரியராசா, த. வீரக்கோன் ஆகியோர் வெற்றி பெற்றார்கள். மூன்றாவதாக நாவாந்துறையைச் சேர்ந்த சென் நிக்களஸ் விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த ம. பாலத்துரை, செ. செபஸ்தியான் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

குருநகர் இறங்குதுறையில் போட்டிகளை பார்ப்பதற்காக பெண்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர்.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. இ. லோகநாதன், செல்வி எஸ். இராமநாதன் ஆகியோர் இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

—— (க—ச)

## ழ்ப்பாணக்—

ம் பக்கத் தொடர்ச்சி]
ரசிவம், சட்டத்தரணி
ரலிங்கம் ஆகியவர்களும்
வில் இருந்தனர்.
டபகுதியில் அமைக்கப்
விருக்கும் வளாகத்திற்கு
ாமநாதனின் பெயர் சூட்
டவேண்டுமென்றும்
ஒரு தேசிய வளாகமாக
மய வேண்டுமென்றும்
வினர் கேட்டுக்கொண்ட
.
ளாகத்தை அமைப்பதற்கு
ி பற்றுக்குறை இருப்ப
க் கருதப்படுமானால்
ப்பாய் ஆசிரியபயற்சிகல்
இருக்குமிடத்தில் 20 ஏக்
காணி இராமநாதன்
த்தாக இருப்பதாகவும்
மேஸ்வராக் கல்லூரியருகி
ய 12 ஏக்கர் சுவீகரிக்கப்
ாத காணி இப்பதாகவும்
யும் தனலக்சுமி வயத்
ி பெருமளவில் இருப்ப
வும் சுட்டிக்காட்டிய குழு
ர் இவைகளைப் பயன
த்திக்கொள்ள வேண்டு
ன்று கேட்டுக்கொண்டது
இதில் வேறு மாற்றம்
வும் ஏற்படுவதைதாங்கள்
ப்பதாகவும் வலியுறுத
ர்.
ந்த சூழ்நிலையில் 7 லட்
இந்துக்கள் வதியும் இப்
தசத்தில் அமையும்
ாகத்தின் தலைவர் ஓர்
ுவாகவே இருத்தல் வேண்
என்றும் அவர்கள் வலி
ுத்தினர்.
ாமூகர்கள் குழுவின் கருத
ளப்பற்றி கவனம் செலு
வதாகவும் இவைபற்றி
அமைச்சருக்கு எடுத்து
பதாகவும் உபவேந்தர்
வினர் தெரிவித்தனர்.

பரமேஸ்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலாகா உத்தியோகத்தர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

பரமேஸ்வராக் கல்லூரிக்கு விஜயம் செய்த திரு. சுமணதாச அங்குள்ள சிவன் கோயிலுக்கும் சென்று விசேஷ பூஜையில் கலந்து கொண்டார். தொடர்ந்து இராமநாதன் கல்லூரிக்கும் சென்று கட்டிடவசதிகளைப் பார்வையிட்டார். இவர்களுடன் கல்வி அதிபர் திரு. த. மாணிக்கவாசகரும், கல்வி அதிகாரி திரு. குமாரசாமியும் சென்றிருந்தனர்.

அரசவிடுதியில் தங்கியிருந்த உபவேந்தர் குழுவினரை நேற்று மாலை 4-30 மணிக்கு இந்த மகாசபையினர் சந்தித்தனர்.

அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவையும் உபவேந்தர் நேற்றுமாலை சந்தித்து உரையாடினார். யாழ். வளாகம் தொடர்பான ஏற்பாடுகள்பற்றி இவர்கள் உரையாடியதாகத் தெரிகின்றது.

## இன்று முடிவு தெரியுமாம்

கொழும்பு, செவ்.
ாழ்ப்பாணக் கல்லூரியை
லைக்கழக வளாகத்துக்
எடுப்பதா இல்லையா
துபற்றி நாளை புதன்
ம முடிவு எடுக்கப்படும்
ு கல்வி அமைச்சு வட்
ங்கள் தெரிவித்தன.
இதுபற்றி ஆராயப்
காகத் தெரிகின்றது.

## சேட வழிபாடு

மீசாலை, செவ்.
ாதம் 17-ம் திகதி
ப்பாணம்மறை மாவட்ட
ருன் மேற்றிராணி
ஜே. எமிலியானுஸ்
ஆண்டகை இறை
யடைந்த இரண்டு
கெ் பூர்த்தியை வ
அன்று யாழ்ப்பாண
ட்ட தேவாலயங்கள்
ும் திருப்பலியும் விசேட
டுகளும் நடைபெற
டாகியுள்ளது. (ஈ)

யாழ்ப்பாணத்தில்

# கடனை திருப்பிச் செலுத்தாத முதலாவது வீடு ஏலவிற்பனை

யாழ்ப்பாணம், புதன்

தேசிய வீடமைப்பு திணைக்களத்தில் வீடு கட்டுவதற்காக பெற்ற கடனை திருப்பிச் செலுத்தாத ஒருவரின் வீடு ஒன்று ஏலத்தில் விற்பனை செய்யப்பட இருக்கிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் இவ்வாறு வீடு ஒன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

வீடமைப்பு திணைக்களத்திடம் இருந்து வீடு கட்டுவதற்காக புங்கன்குளத்தைச் சேர்ந்த அருணம்பலம் என்பவர் கடன் பெற்றிருந்தாராம். இவர் உரிய காலத்தில் தனது கடனை திருப்பிச் செலுத்தாதபடியால் இவரது வீடு இம்மாதம் 24-ம் திகதி ஏலத்தில் விற்பனை செய்யப்பட இருப்பதாக உதவி வீடமைப்பு ஆணையாளர் திரு. எஸ். செல்லையா தெரிவித்தார். விற்பனைக் கமிஷனர் திரு. எம். நவரத்தினராசா இவ் வீட்டை ஏலத்தில் விற்பனை செய்வார்.

# "பாடசாலையின் வளர்ச்சி பெற்றோர் ஆசிரியர் கையில்"

மீசாலை, செவ்.

"பாடசாலையை ஆரோக்கியமாக இயக்கிக்கொண்டு வந்தாலும் பெற்றோரிலும் ஆசிரியரிலுமே அதன் முக்கிய வளர்ச்சி பெரிதும் தங்கியுள்ளது. நம்நாடு நம் பாடசாலை, நம் பிள்ளைகள் என்ற உணர்ச்சி ஒவ்வொருவரிடமும் உதயமாகவேண்டும்".

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய திறந்தவெளி அரங்கிற்கான அத்திவாரக்கல் நாட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. இராசநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

சைவசமய சம்பிரதாயப்படி மீசாலையைச்சேர்ந்த திரு. எம். சி. சுப்பிரமணியம் அத்திவாரக்கல்லை நாட்டினார்.

வித்தியாலய அதிபர் பண்டிதர் திரு. செ. சிவலிங்கம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் திரு. இராசநாயகம் மேலும் பேசும் போது கூறியதாவது: 'குழந்தைவளர வளர அதனுடைய உடலிலும் உள்ளத்திலும் மாற்றங்கள் ஏற்படுவது போல பாடசாலைகளும் வளர வளர உயர்வான மாற்றங்கள் நடைபெறவேண்டும்.

'அமெரிக்கா ரஷ்யா போன்ற மேலைத் தேசங்களில் உள்ள குழந்தைகள் நம் நாட்டுக் குழந்தைகளைவிட அறிவு தெளிவு ஆற்றல் என்பவற்றில் திறமையாயிருக்கின்றனர். அதற்குக் காரணம் அங்கு மாணவரின் கல்வி போதனைக்குரிய சகலவசதிகளும் இருப்பதுதான்'.

மூன்னாள் அதிபர் திரு. மு. சின்னத்தம்பி சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம், சமாதான நீதவான் திரு. கே. குமாரசாமி, உப அதிபர் திரு. பி. காசி என்போர் உரையாற்றினர். (க)

## சிலைகளுக்கு மலர் மாலை

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாநகர சபை வெள்ளி விழாவையொட்டி நகர வீதி முகப்புகளில் அமைக்கப்பட்ட சிலைகளுக்கு பொதுமக்கள் நாள்தோறும் மாலைகள் அணிவித்து மலர் சாத்திவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

# 150 விஞ்ஞான ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

கொழும்பு, செவ்வாய்

மேலும் 150 விஞ்ஞான ஆசிரியர்கள் புதிதாக நியமனம் பெற உள்ளனர் என்று கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்மாத முடிவுக்குள்ளேயே இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுவிடும் என்றும் இவ்வருடம் ஏற்கனவே 600 பேர் விஞ்ஞான ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்குவந்தபின்னர் 5 ஆயிரம் விஞ்ஞான ஆசிரியர்கள் உட்பட 26 ஆயிரம் பேர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.


சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
பெற்றால்தான் பிள்ளையா?

இ வ ல் லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 3-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
அரசகட்டளை

நா க ம் ஸ்
[கன்னாகம்]
தினசரி 6-30, 9-30
ஜெமினி - அஞ்சலிதேவி
மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்

REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p.m.
Norman Wisdom
in
ON THE BEAT

ஸ்ரீதர் சினிமா (யாழ்ப்பாணம்)
ஜெமினி - சாவித்திரி
தினசரி 4 காட்சிகள்
பி ரே ம பா ச ம்
வெகு விரைவில் MAGNUMFORCE (Cinemascope)

றியோ (யாழ். நகர மண்டபம்)
தினசரி 10-30, 2-00
4-45, 7-15, 9-45
ஆபிரிக்காவின் இரகசியக் காடுகள்
SECRET FOREST OF AFRICA

ராணி [யாழ்ப்பாணம்]
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
முத்துராமன் - நம்பியார்
தினசரி 4 காட்சிகள்
ஒரு தாய் மக்கள்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
மகத்தான 3-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
சுந்தரராஜன்
மனோகர்
வாயாடி

2-வது ஜனத்திரள் மாதம்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
நம்பியார் - முத்துராமன்
நடித்த
பொன்னூஞ்சல்

உங்கள் உள்ளங்களை மகிழ்விக்க
விஜயம் செய்துள்ளாள்!
யாழ் - வின்ஸர் வெண்திரையில்
அசோக் பிக்சர்ஸ் அளிக்கும்
வந்தாளே மகராசி
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-15, 9-45
★ ஜெய்சங்கர் ★ டி. கே. பகவதி
★ வி. எஸ். ராகவன் ★ சோ
★ ஜெயலலிதா (இரு வேடங்களில்) ★ புஷ்பலதா
★ எம். என். ராஜம்
நடித்தது
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
பாடல்கள்: வாலி

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு
காலை 10-30
இது ஒரு வழக்கமான கதை அல்ல;
முற்றிலும் மாறுபட்ட கதை.
தாக்குரிய மனைவியை தான் அடையவேண்டிய
அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும்
ஒரு கோடீஸ்வரனின் கதை
ஆறு குணங்கள் கொண்டவளாம் ஒரு பாவை
அது யாரோ அவரோ— அவன்தான்......
ராமன் தேடிய சீதை
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

லிடோ [யாழ்ப்பாணம்]
ஷர்மிலா தாகூர், ராஜேந்திரகுமார்
நடித்த
தினசரி 4 காட்சிகள்
தலாஷ் (TALASH)
(ஈஸ்ட்மன் வர்ண ஹிந்திச் சித்திரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நேர்மை, வஞ்சகமற்ற சிரிப்பு, சூதில்லாமல் செய்யும் காரியம் ஆகிய இவை மூன்றும் குழந்தைகளிடம் கற்கவேண்டிய பாடங்கள்.

—ராதாகிருஷ்ணன்.

ஈழநாடு
EELA NADU
17-7-74

## ஆசிரிய பயிற்சி

கல்வியே ஒருநாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை மூலவளம் என்ற கருத்தை இற்றைக்கு 23 நூற்றாண்டுகளுக்கு முன்பு வெளியிட்டவர் கிரேக்க தத்துவ ஞானியாகிய பிளேட்டோ ஆவர்.

அரசியல் கோட்பாடுகள் என்னவானாலும் இந்த உண்மையையே இன்று எல்லா நாடுகளும் ஒப்புக்கொள்கின்றன. முதலாளித்துவ நாடுகளென்றாலென்ன, சோஷலிச நாடுகளென்றாலென்ன, கல்வியின் வளர்ச்சியைக் கொண்டே நாட்டை வளம்படுத்த திட்டமிடுகின்றன.

கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவைகளில் திறமைமிக்க ஆசிரிய சேவையையே முதன்மையதாகக் கொள்ளவேண்டும். ஆசிரியராக ஒருவர் நியமனம் பெற்றுவிட்டால் என்றுமே நல்லாசிரியராகக் கடமை ஆற்ற முடியுமென்றளவில் இந்நாட்டு ஆசிரிய சேவை அமைந்திருக்கிறது. இரண்டு வருட ஆசிரிய பயிற்சியில் பெற்ற அறிவும் அனுபவமும் சேவைக்காலம் முழுவதற்கும் போதுமே என்ற பாங்கில் சேவை இயங்கிவந்திருக்கிறது.

மாறும் உலகில், விஞ்ஞான, பொருளாதார, சமுதாயத் துறைகளில் வேகமான மாற்றங்கள் நிகழ்வதை சாதாரண ஆசிரியர் அறியாமலிருப்பது வியப்பல்ல. ஊற்றெடுக்காத கிணற்றில் தேங்கிக் கிடக்கும் நீரைப்போல ஆசிரியரின் சிந்தனைத் திறம் அமைந்திருப்பது மாணவரின் கல்வியைப் பெரிதும் பாதிக்கும்.

புத்தாக்க வகுப்புக்கள் மூலம் நிலைமையைத் திருத்த முயல்வது, 'டபிள் நியூமோனியா'க்காரனுக்கு மல்லித் தண்ணீரை மருந்தாகக் கொடுப்பதை ஒக்கும் இந்த உண்மையை உணர்ந்த கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கு சேவையிலிருக்கும் போதே பயிற்சி அளிப்பதற்கு ஒரு மாரியதிட்டம் வகுத்துள்ளது. அமைச்சு வெளிப்படுத்திய இத்திட்டத்தை கவனிக்குமிடத்தால் அதன்பெருமையும் அவசியமும் புலப்படும். திட்டங்களின் கடந்தகால அனுபவத்தைப் புரிந்துகொண்ட கல்வி அமைச்சு, இதனை காலதாமதமின்றி அமுல் நடத்த முடிவுசெய்துள்ளது.

திட்டம் செயற்படும் கட்டத்தில் பல பிரச்சினைகள் கல்வி அமைச்சுக்கு தலைவலி கொடுக்கும். இவற்றையெல்லாம் சமாளித்து முன்னேற முடியுமானால் ஆசிரிய சேவை புத்துயிர் பெறமுடியும். பெற்றோரும் மாணவரும் அக்கறை கொள்ளவேண்டியவிஷயம் ஆசிரியபயிற்சி. கல்வியென்னும் கச்சவடத்தின் மூன்று பங்காளிகள்-மாணவரும், ஆசிரியர், பெற்றோர்- ஆசிரிய பயிற்சியில் அவநம்பிக்கை கொள்வதும் உண்டு. ஆசிரியருக்குரிய நற்பண்புகளை, எவ்வித பயிற்சியும் உருவாக்க மாட்டாவென்ற கருத்தே இதற்குக் காரணமாயிருத்தல் கூடும்.

ஆசிரிய புதுமுறைப் பயிற்சி அவசியமென்பதை நாம் உணரும் அதேவேளையில் நல்லாசிரியரின் பண்புகளை நினைவுபடுத்த வேண்டியதும் அவசியமே.

நல்ல ஆளுமைப் பண்புகளைக்கொண்டிராத ஆசிரியன், மாணவருக்கு முன்மாதிரியாக அமையாத ஆசிரியன், தாம் கற்பிக்கும் மாணவரில் கரிசனை கொள்ளாத ஆசிரியன், பயிற்சி பெற்றாலென்ன, பெறாமலிருந்தாலென்ன? எந்த ஆசிரியப் பயிற்சித் திட்டத்துக்கும் அடிப்படையான அம்சம் இது வென்பதை உணரமுடியுமானால் திட்டம் பயனளிக்கும்.

# என். சி. ஜி. ஈ. பரீட்சையில் தவறுகள் ஏற்படுமாம்

## நீக்கிவிடுமாறு கோரிக்கை

கொழும்பு, செவ். 1975-ம் ஆண்டு முதல் நடைபெற இருக்கும் தேசிய சான்றிதழ்பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சைத் திட்டத்தில் அடிப்படைத் தவறுகள் உண்டு என்றும் ஆகவே அப் பரீட்சையை நீக்கிவிடுமாறு அகில இலங்கை கல்விச் சம் மேளனம் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூதைக் கேட்டுள்ளது.

தேசிய சான்றிதழ் பொதுப் பரீட்சைத்திட்டம் அவசரமாகத் தயாரிக்கப்பட்டது என்றும் இதில் உள்ள தவறுகள் கல்வித்துறையில் பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்றும் இச்சம்மேளனம் கல்விஅமைச்சருக்கும் கல்வி அமைச்சின் காரியதரிசி டாக்டர் பிரேமதாச உடகமவுக்கும் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பரீட்சையினால் ஏற்பட இருக்கும் கல்வி நெருக்கடி களைப்போக்கும் வகையில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் ஒருதிட்டத்தின் அடிப்படை மாற்றங்கள் செய்யவிரும்பின் அவற்றை அமுலுக்கு கொண்டுவருமுன் அத்திட்டம் பொதுமக்கள் நன்கு அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்றும் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

## தயாள்பாக் தொண்டர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், புதன் எமது பாரம்பரியமான பண்பையும் சமயத்தையும் பேணி வாழ்ந்த பொருளாதார வளத்தைப் பெருக்குவது எங்ஙனம் என்பதையும் தாம் நேரில் கண்டறிந்த பேரற்புதத்தையும் தயாள்பாக் நிலையத் தொண்டர் திரு. எஸ். கிருஷ்ணானந்த இம்மாதம் 22-ம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் விளக்குவார்.

ஆக்ரா நகரில் தயாள்பாக் என்ற காலனியில் மெஞ்ஞானத்துடன் விஞ்ஞானத்தையும் பயன்படுத்தி, பொருளாதாரத்தைப் பெருக்கி பஞ்சம் பிணி என்பவற்றைப் போக்கி மக்கள் நல்வாழ்வு வாழ்வதன் இரகசியத்தை திரு. கிருஷ்ணானந்த எடுத்துரைப்பார். (அ)

## அஞ்சலிக் கூட்டம் வி. என். பி.

யாழ்ப்பாணம், புதன் அமரர் வி. என். பியின் நினைவு தினம் இம்மாதம் 20-ந் திகதி சனிக்கிழமை அவரது பிறந்த ஊரான நவாலியில் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை டாக்டர் எஸ். கே. மகேஸ்வரன் தலைமையிலான குழுவொன்று கவனித்து வருகிறது.

இவரது அந்தியேட்டி இம்மாதம் 21-ம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அதற்கு முதல்நாள் அவரது நினைவு தினத்தை நவாலியில் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

கவிஞர் சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதலியார் எஸ். மகேசன் உட்படப் பலர் உரையாற்றுவர். (ச)

## கைதடி கிராமசபையில் ரூபா 50,000 வரிப்பாக்கி

கல்வியங்காடு, செவ். கைதடி கிராமசபைப் பகுதியில் கடந்த ஒன்பது வருடங்களாக சுமார் ஐம்பதினாயிரம் ரூபா வரிப்பாக்கி அறவிடப்படாமல் இருந்துவருகிறதாம். இவ்வாறு வரி அறவிடுவதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் வரிநிலுவைகளை அறவிடுவதற்கென ஒவ்வொரு கிராம சபை தோறும் ஒவ்வொரு உத்தியோகத்தரை நியமித்து பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஈ)

## பஸ்-கார் விபத்து: சாரதி படுகாயம்

மீசாலை, செவ்வாய் திருமணப் பதிவு முடிந்து வீடு திரும்பியவர்கள் பயணஞ்செய்த மோட்டார் வாகனம் ஒன்று இ. போ. ச. பஸ் வண்டியுடன் மோதியதால் பலத்த சேதமடைந்தது. அவ்வாகனத்தில் பிரயாணஞ்செய்த 5 இளைஞர்களும் காயமடைந்தனர்.

மோட்டார்க் காரச் சாரதி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்

இவ்விபத்து சங்கத்தானையில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் நடைபெற்றது.

# கோவில் பெயரில் தண்டல்: நபர் மாட்டிக்கொண்டார்

யாழ்ப்பாணம், புதன் கோவில் பெயரைச் சொல்லித் தண்டல் செய்த நபர் ஒருவர் வகைவராக மாட்டிக்கொண்டு கைப்பணத்தையும் கணக்குப்புத்தகத்தையும் பறிகொடுத்து ஓடிய சம்பவம் மருதனாமடம் சந்தியில் நடந்தது.

மருதனாமடம் சந்தியில் உள்ள தேநீர்க்கடைக்காரர் ஒருவரிடம் மாட்டிக்கொண்ட பிரஸ்தாப நபர் அதிர்ஷ்டவசமாகப் பொலிசாரிடம் அகப்படாமலே கம்பி நீட்டிக்கொண்டார்.

தாம் பண்ணாகத்தை சேர்ந்தவரென்றும் பெயர் சுப்பிரமணியம் என்றும் தெரிவித்துக்கொண்ட அந்நபர், தாம் சேர்க்கும் பண விபரங்களைக் கொண்ட புத்தகத்தையும் மடியிலிருந்த 12 ரூபாவையும் பறிகொடுத்து ஓட்டம் பிடித்தாராம்.

முறிகண்டிப் பிள்ளையார் கோவிலுக்குத் தாம் நட்சத்திரப் பெயரில் அர்ச்சனைக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறித் தண்டல்செய்து வந்த அவர் மருதனாமடத்திலுள்ள தேநீர்க்கடைக்காரரான செல்லத்துரை என்பவரிடம் கடந்த மாதம் இக்கோவில் பெயரில் 5 ரூபா தண்டியதாகவும், இதன் பின்னர் செல்லத்துரை முறிகண்டி சென்றபோது, விசாரித்ததையடுத்து குட்டு வெளிப்பட்டதாயும், தொடர்ந்து இம்மாதமும் அந்நபர் தண்டலுக்குச் சென்ற சமயம் செல்லத்துரையிடம் மாட்டிக்கொண்டதாகவும், ஆயினும் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும் தெரியவந்தது. (அ)

# பணிப்பெண் மரணம்!

யாழ்ப்பாணம், புதன் புன்னாலைக்கட்டுவன் வடக்கிலுள்ள வீடொன்றில், பணிப்பெண்ணாக வேலை செய்துவந்த மாதகலைச் சேர்ந்த 19வயது இளம்பெண் இரவு நேரத்தில், வீட்டில் வாயினால் நுரைதள்ள மயக்கமடைந்த நிலையில் கிடந்தார். உடனடியாக பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

புன்னாலைக்கட்டுவனில் பணிப்பெண்ணாகக் கடமையாற்றிய கந்தையா வள்ளியின் மரணவிசாரணையில் மேற்கண்டவிபரம் தெரியவந்தது. யாழ். மரணவிசாரணை அதிகாரி வி. நடராசா மரணவிசாரணை நடத்தினர்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்லையாவின் வீட்டில் இப்பெண்வேலையாள் தொழில்புரிந்ததாகவும் அன்றிரவு அறைக்குள், வித்தியாசமான சத்தம் கேட்டு, வீட்டுக்காரர் உள்ளே போய்ப்பார்த்தபோது, பணிப்பெண் வாயினால் நுரைதள்ளி மயங்கிக் கிடந்தாரென்றும் அருகில் நச்சுத்திரவகப்போத்தலொன்று காணப்பட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

உடனடியாக தேங்காய் எண்ணெயும், நல்லெண்ணெயும் பருக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் பணிப்பெண் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

பெண்ணின் பெற்றோர் வரும்வரை சடலத்தை, சவச்சாலையில் வைக்கும்படியும், அதன்பின் பிரேதபரிசோதனை நடத்தும்படியும் மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். (ச)

## "பாடசாலைக்கு பழைய மாணவர் உதவ வேண்டும்"

அரியாலை, செவ் பழைய மாணவர்களின் நிலையிலேயே பாடசாலையின் வளர்ச்சி தங்கியுள்ளது. பாடசாலையின் வளர்ச்சிக்குப் பழையமாணவர் சங்கம் நன்குதவி புரியவேண்டும். அரசாங்கமே சகல பாடசாலைகளையும் நடத்தி வருவதால் பாடசாலைகளுக்கிடையில் வித்தியாசம் இருக்க மாட்டாது. ஆகவே இப் பாடசாலையைச் சுற்றியுள்ள மாணவர்கள் இப்பாடசாலையிலேயே சேரவேண்டி ஏற்படும். பாடசாலையில் சேர்வதற்கு இப்பாடசாலை ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குள்ள சலுகை, பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கும் இருக்கும்"

மேற்கண்டவாறு யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயப் பழைய மாணவர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்படி கல்லூரி அதிபர் திரு. ஜே. அரியரத்தினம் குறிப்பிட்டார். வி. கதிரவேலு, ப. ஜீவானந்தம் ஆகியோர்களும் உரையாற்றினர். [illegible] தெரிவு செய்யப்பட்டனர். (அ)

## பகிஷ்கரிப்பு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சி மகாநாட்டிற்கு பூரண ஒத்துழைப்புத் தருவதாகக் கூறினேன். அச்சமயம் தமிழ் பெரியார்களுக்குச் சிலநாட்டுவதுபற்றி என்னிடம் கூறவில்லை. அப்படிக் கூறியிருந்தால் நிச்சயம் இடவசதியளித்து உதவியிருப்பேன். அதற்குப்பின் வந்த குழுக்கள் கூட சிலை நிறுவுவதாக முடிவு செய்ததாக எனக்குத் தெரியவில்லை.

தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்கு 20,0000 ரூபா ஒதுக்கி சகல உதவிகளும் வழங்கினேன். அதுமட்டுமல்ல என் தலைமையில் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின்போது உயிர் நீத்தவர்களுக்கு ஞாபகச்சின்னம் நிறுவ மாநகரசபையிடவசதியளிக்கும் என்ற தீர்மானமொன்றையும் நிறைவேற்றியுள்ளது.

வெள்ளிவிழாவில் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டது இன்றைய அரசியல் நிலைமையை எடுத்துக்காட்டியுள்ளது. (க)

(1-ம்பக்கத் தொடர்ச்சி

ஜின்றன. கம்யூனிஸ்ட் கட்சியில் இணைப்பு ஏற்பட்டுவிட்டதால் அவரும் குழுவினரும் அரசாங்கக்கட்சியில் அனுமதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. (சி. பி. ஏ)

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் தேவிமகோற்சவம் 4-ந் திருவிழாவாகிய இன்று பகல்திருவிழா 9-00 மணிக்கும் மாலை 6 மணி முதல் இரவு 7-30 மணிவரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான்சுவாமிகளின் "தேவி மகிமை" பற்றிய சமயப்பிரசங்கமும், இரவு 7-30மணிக்கு வசந்தமண்டப பூஜையும் இடம்பெறும். பின் அம்பாள் யாளி வாகனத்தில் திருவீதி வலம் வருதலும் நிகழும்.

பருத்தித்துறை, செவ் நெல்லியடி கட்டைவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் ஒருவரைத் தலைவர் பதவி நீக்கியதன் காரணமாக நடைபெற்ற வேலைநிறுத்தம் இயக்குநர் சபையின் தலையீட்டால் முடிவுபெற்றது.

## மரண அறிவித்தல்

### S. ஆறுமுகம்

மகாஜனக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் சு. ஆறுமுகம் காலமானார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும் அமெரிக்க ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த விமலச்சந்திரா, கொழும்பு ஜெனரல் இன்டஸ்ரீஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாவார். அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை மயானத்தில் தகனம் செய்யப்படும். தயவுசெய்து இதனை ஒழுங்கை. தெல்லிப்பழை. 192

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கோவில் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு ஜூலை 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box No. 49, Jaffna. [illegible]
[illegible] 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org